# +1 கணக்குப்பதிவியல்
# முதல் இடைப்பருவத் தேர்வுப் பகுதி
## ஜூன் முதல் ஜூலை வரையுள்ள பாடப்பகுதி





Padasalai.Net

# பாடம் 1
# கணக்கியல் அறிமுகம்



Padasalai.Net

Prepared by:


# M.Muthu Selvam

M.Sc.,M.Com.,M.Ed.,M.Phil

PG.Asst., (Commerce)

MLWA.Hr.Sec.School

Madurai –1

Mail Id : dhakshina29@gmail.com

Mobile No : 98421 04826


Padasalai.Net

# கணக்கியலை வரையறு
# Define accounting

- அமெரிக்க கணக்கியல் கழகத்தின் கூற்றின்படி "கணக்கியல் என்பது பொருளாதார தகவல்களைக் கண்டறிந்து, அளவீட்டு, தகவல் தெரிவிக்கக்கூடிய ஒரு செயல்பாடாகும்.
- இதன் மூலம் தகவல்களைப் பயன்படுத்துவோர் தக்க தீர்வு காண்பதற்கும் மற்றும் முடிவெடுப்பதற்கும் வகை செய்கிறது."




PaadaSalai.Net

# கணக்கியலின் ஏதேனும் இரண்டுபணிகள்
# List any two functions of accounting.



- அளவிடுதல்:–
- வணிக நடவடிக்கைகள் குறித்து முறையான ஆவணங்களை வைத்திருத்தல், பதிவுசெய்தல், எடுத்தெழுதல், கடைசியாக இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல் ஆகியவையே கணக்கியலின் முதன்மையான பணியாகும்.

# கணக்கியலின் ஏதேனும் இரண்டுபணிகள்
## List any two functions of accounting.

- ஒப்பிடுதல்:–
- கணக்கியல் நிகழ்ந்த செயல்திறனுடன், திட்டமிட்ட செயல்திறனை ஒப்பிட உதவுகிறது



Padasalai.Net

# கணக்கியல் செயல்பாட்டிலுள்ள படிநிலைகள்
# The steps involved in the Process of Accounting




- நடவடிக்கைகளை இனம் கண்டு குறிப்பேட்டில் பதிவு செய்தல்,
- எடுத்தெழுதுதல் மற்றும் இருப்புக் கட்டுதல்.
- இருப்பாய்வு தயாரித்தல்
- வியாபாரக் கணக்கு தயாரித்தல்
- இலாப நட்டக் கணக்கு தயாரித்தல்
- இருப்பு நிலைக் குறிப்பு தயாரித்தல்.

# கணக்கியல் தகவல்களில் ஆர்வமுடையவர்கள்
# The parties interested in Accounting Information

- அகப் பயனீட்டாளர்கள்:– உரிமையாளர்கள், பணியாளர்கள், நிர்வாகம்.
- புறப் பயனீட்டாளர்கள்:– முதலீட்டாளர்கள், வாடிக்கையாளர்கள், கடனீந்தோர், வரிவிதிப்பு அதிகாரிகள், ஆராய்ச்சியாளர்கள், நிதிநிறுவனங்கள் மற்றும் அரசாங்கம்.



Padasalai.Net

# கணக்கியல் தகவல்களைப் பதிவு செய்யும் எவையேனும் இரண்டுஅடிப்படைகளின் பெயர்களைத் தருக.

# Name any two bases of recording accounting information.




- ரொக்க அடிப்படை,
- நிகழ்வு அடிப்படை அல்லது வணிக அடிப்படை,
- கலப்பு அல்லது கலப்பின அடிப்படை.

Padasalai.Net

# கணக்கியலின் பொருள்

## Explain the meaning of accounting.

- கணக்கியல் என்பது நிதியியல் தகவல்களை, இனம் காணுதல், அளவிடுதல், பதிவுசெய்தல், வகைப்படுத்துதல், சுருக்கமுணர்தல், உய்த்துணர்தல் மற்றும் தகவல்களைத் தெரிவித்தல் போன்ற முறையான செயல்பாடுகளை உள்ளடக்கியது.




Padasalai.Net

# கணக்கியலின் பிரிவுகள்
## Branches of Accounting




- நிதி நிலைக் கணக்கியல்:–
- நிதியியல் நடவடிக்கைகளையும், நிகழ்வுகளையும் பதிவு செய்யக் கூடியது.
- இது வரலாற்றுத் தன்மையுடையது.
- ஏற்கனவே நடந்து முடிந்த நடவடிக்கைகளை மற்றும் நிகழ்வுகளை கணக்கேடுகளில் பதிவு செய்து பராமரிப்பதே நிதிநிலை கணக்கியலாகும்.



Padasalai.Net

# கணக்கியலின் பிரிவுகள்
## Branches of Accounting

- அடக்க விலைக் கணக்கியல்:–
- பொருட்கள் அல்லது சேவைகளின் அடக்கவிலையைக் கணக்கிடுவதற்கு செலவு விவரங்களை சேகரித்து, பதிவு செய்து, வகைப்படுத்தி, செலவினங்களை ஒதுக்கீடு செய்வது அடக்கவிலைக் கணக்கியல் ஆகும்.




Padasalai.Net

# கணக்கியலின் பிரிவுகள்
## Branches of Accounting




- மேலாண்மைக் கணக்கியல்:–
- கணக்கியல் தகவல்களை நிர்வாகத்திற்கு தருவதன் மூலம் முடிவு எடுப்பதற்கும் நிறுவனத்தின் அன்றாட செயல்பாடுகளுக்கும் துணை செய்வதே மேலாண்மைக் கணக்கியல் ஆகும்.

Padasalai.Net

# கணக்கியலின் பிரிவுகள்
## Branches of Accounting

- சமூகப் பொறுப்பு கணக்கியல்:-
- வணிக நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் கணக்கியல் தகவல்களை சமூகத்தின் பார்வையில் வழங்குவதாகும்.




Padasalai.Net

# கணக்கியலின் பிரிவுகள்
## Branches of Accounting




- மனிதவளக் கணக்கியல்:–
- ஒரு நிறுவனம் அதன் மனித வளத்தில் செய்த முதலீடுகளை இனம் காணுதல், அளவிடுதல் மற்றும் அறிவித்தல் ஆகியவற்றைச் சார்ந்ததாகும்.

# கணக்கியலின் முக்கியத்துவம்
# Importance of Accounting.

- முறையான பதிவேடுகள்:–
- அனைத்து நிதிசார்ந்த நடவடிக்கைகளும் கணக்கேடுகளில், முறையாகவும் பொதுவான தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டும் தொகுக்கப்படுகின்றன.



Padasalai.Net

# கணக்கியலின் முக்கியத்துவம்
# Importance of Accounting.




- நிதிநிலை அறிக்கைகள் தயாரித்தல்:–
- வருமான அறிக்கை அல்லது இறுதிக் கணக்குகளை, உரிய காலத்தில் தயாரிப்பதன் மூலம் வணிகத்தின் இயக்க முடிவுகளையும், நிதிநிலையையும் அறியமுடியும்.

Padasalai.Net

# கணக்கியலின் முக்கியத்துவம்
# Importance of Accounting.

- வளர்ச்சியை மதிப்பிடல்:–
- நிதிசார் விவரங்களைப் பகுப்பாய்வு மற்றும் உய்த்துணர்வு செய்வதன் மூலமாக பல்வேறு செயல்களின் வளர்ச்சியை மதிப்பிடவும் பலவீனங்களைக் கண்டறியவும் இயலும்.




Padasalai.Net

# கணக்கியல் தகவல்களில் பின்வரும் பயனீட்டாளர்கள் ஏன் ஆர்வமாக உள்ளனர்?

**Why are the following parties interested in accounting information?**



- முதலீட்டாளர்கள்:– Investors
- ஒரு நிறுவனத்தில் தங்களது நிதியை முதலீடு செய்யும் ஆர்வமுள்ளவர்கள் முதலீட்டாளர்கள்.
- தாங்கள் இடும் முதல், இலாபகரமாக தங்களது கைக்கு திரும்ப வரவேண்டும் என அறிந்து கொள்ளவும் அதிக ஆர்வம் கொண்டிருப்பர்.

Padasalai.Net

# கணக்கியல் தகவல்களில் பின்வரும் பயனீட்டாளர்கள் ஏன் ஆர்வமாக உள்ளனர்?

Why are the following parties interested in accounting information?

- அரசு:– Government
- வணிக நிறுவனங்கள், நாட்டின் அரிதான வளங்களைப் பயன்படுத்துகின்றன.
- அரசாங்கம், வணிக நிறுவனங்களின் செயல் திறனை அறிந்து வைத்திருந்தால் மட்டுமே அரிதான வளங்களை ஒதுக்கீடு செய்தல், வணிகம் மற்றும் தொழில் துறைசார்ந்த கொள்கை முடிவுகளை உருவாக்குதல், மானியம் மற்றும் சலுகைகள் வழங்குதல் போன்றவற்றிற்கான முடிவுகளை எடுக்க முடியும்.






Padasalai.Net

# நவீனவணிகஉலகில் கணக்காளரின் பங்களிப்பு

## The role of an accountant in the modern business world.




- ஏடுகளைப் பராமரிப்பவர்–
- நிதிசார்ந்த நடவடிக்கைகளை முறையாக பதிவுசெய்து ஏடுகளைப் பராமரிக்கிறார்

PadaSalai.Net

# நவீனவணிகஉலகில் கணக்காளரின் பங்களிப்பு

## The role of an accountant in the modern business world.

- நிர்வாகத்திற்குத் தகவல்களைத் தருபவர்:–
- முடிவுகளை எடுக்கவும் மற்றும் கட்டுப்பாடுகளை விதிக்கவும், நிர்வாகத்திற்குத் தேவையான நிதிசார்ந்த தகவல்களை அளித்து உதவுகிறார்.



PaaSalai.Net

# நவீனவணிகஉலகில் கணக்காளரின் பங்களிப்பு
## The role of an accountant in the modern business world.



- வணிகச் சொத்துக்களின் காப்பாளர்:–
- சொத்துக்களுக்கான பதிவேடுகளைப் பராமரிப்பதன் மூலம் நிர்வாகம் அந்தச் சொத்துக்களைப் பாதுகாத்து கட்டுப்படுத்த முடிகிறது.
- சொத்துக்களுக்கான காப்பீடு மற்றும் சொத்துகள் பராமரிப்பைப் பற்றிய ஆலோசனையை நிர்வாகத்திற்கு வழங்குகிறார்

- இனிவரும் நாட்களில் அடுத்தடுத்த பாடங்கள் வெளியிடப்படும்
- புத்தகத்தில் உள்ள பாடத்தின் பின்னால் உள்ள வினா விடைகள் மட்டும்

Padasalai Net

Thank you ….

# M.Muthu Selvam

M.Sc.,M.Com.,M.Ed.,M.Phil
PG.Asst., (Commerce)
MLWA.Hr.Sec.School
Madurai -1

Mail Id : dhakshina29@gmail.com

Mobile No : 98421 04826

Padasalai.Net

# +1 கணக்குப்பதிவியல்

# முதல் இடைப்பருவத் தேர்வுப் பகுதி

## ஜூன் முதல் ஜூலை வரையுள்ள பாடப்பகுதி




Padasalai.Net

# பாடம் 2

# கணக்கியலின் கருத்துக் கட்டமைப்பு




Padasalai.Net

Prepared by:


# M.Muthu Selvam

M.Sc.,M.Com.,M.Ed.,M.Phil

PG.Asst., (Commerce)

MLWA.Hr.Sec.School

Madurai –1

Mail Id : dhakshina29@gmail.com

Mobile No : 98421 04826


Padasalai.Net

# கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு.
# Define book–keeping.

- ஜே. ஆர். பேட்லிபாய் அவர்களின் கூற்றுப்படி "கணக்கு ஏடுகள் பராமரிப்பு என்பது, வணிக நடவடிக்கைகளை ஏடுகளில் பதிவு செய்யும் ஒரு கலையாகும்."




Padasalai.Net

# கணக்கியல் கருத்துக்கள்
# Accounting Concepts




- கணக்கியல் முறையின் அடிப்படைக்காக, மேம்படுத்தப்பட்டு நிறுவப்பெற்ற அடிப்படை விதிமுறைகள் மற்றும் அனுமானங்கள், கணக்கியல் கோட்பாடுகள் எனப்படுகின்றன.
- இந்தக் கணக்கியல் கோட்பாடுகளை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள் எனப்படும்.

# தீர்வு கருத்து

## Realisation Concept

- ஒரு சொத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றம், அச்சொத்துக்கள் வணிகத்தால் தீர்வு செய்யப்படும் போது மட்டுமே பதிவு செய்யப்படும்.
- புராதன அடக்கவிலையில், சொத்துக்கள் பதிவு செய்தால் சொத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றம் அச் சொத்து தீர்வு செய்யும் போது மட்டுமே கணக்கில் கொண்டுவரப்பட வேண்டும்.



# கணக்கியல் முழு வெளியீட்டுகொள்கை

## "Full Disclosure Principle" of accounting




- அனைத்து முக்கியத்தகவல்களும் நிதிநிலை அறிக்கை மூலமாக வெளிப்படுத்த வேண்டும் என்பதை இது வலியுறுத்துகிறது.
- பெரும்பாலான நிறுவனங்களில் நிர்வாகமும் உரிமையாளர்களும் வேறுபடுத்தப்பட்டு இருப்பதால் இந்த மரபு முக்கியத்துவம் பெறுகிறது.

# பொருத்துகை கருத்து என்றால் என்ன?
## ஏன் ஒரு வணிக அமைப்பு இக்கருத்தைப் பின்பற்றவேண்டும்?
## 'Consistency' assumption

- ஒரு குறிப்பிட்ட கணக்காண்டில் ஈட்டிய வருவாய், அவ்வருவாயை ஈட்ட, அவ்வாண்டில் செய்த செலவுகளோடு ஒப்பிடப்படுவதை இது குறிக்கும்.
- இது நிகழ்வுத் தீர்வு கருத்து மற்றும் கணக்கியல் காலக் கருத்தினை அடிப்படையாகக் கொண்டதாகும்.
- கணக்கியல் காலக் கருத்து நிறுவனத்தின் திறனை அளவிடவும் மற்றும் நிதிநிலையை தீர்மானிப்பதற்குமான காலக்கெடுவை நிர்ணயிக்கிறது.




Padasalai.Net

# பொருத்துகை கருத்து என்றால் என்ன?
## ஏன் ஒரு வணிக அமைப்பு இக்கருத்தைப் பின்பற்றவேண்டும்?
### 'Consistency' assumption




- குறிப்பிட்ட ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் அனைத்தும் கணக்கில் கொள்ளப்படாமல், அந்த கணக்காண்டிற்குரிய செலவுகள் மட்டுமே கருத்தில் கொள்ளப்படவேண்டும் என்பதையும் இது குறிக்கின்றது.
- மேற்கண்ட காரணத்தாலேயே, ஒருவணிக அமைப்பு பொருத்துகை கருத்தை பின்பற்ற வேண்டும் என சொல்லப்படுகின்றது.

Padasalai.Net

# பணம் சார்ந்தநடவடிக்கைகள் கணக்கியலில் பதியப்படுதல் வேண்டும் – விவரி

"Only monetary transactions are recorded in accounting". Explain the statement.

- பணமதிப்பீட்டுக் கருத்தின்படி, எந்த நடவடிக்கைகளைப் பணத்தால் அளவிட முடியுமோ, அந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்குகளில் பதியப்படவேண்டும் என்பதைக் குறிக்கிறது.
- பணமானது, பரிமாற்றத்தின் ஊடகமாக விளங்குவதால், பணத்தால் அளவிடக் கூடிய நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுகின்றன.




Padasalai.Net

**ஒரு வணிக நிறுவனம் தொடர்ச்சியாக நடைபெறவேண்டும். இதை அடிப்படையாகக் கொண்ட கணக்கியல் கருத்தை விளக்குக.**

"Business units last indefinitely".

Mention and explain the concept on which the statement is based.




- ஒரு வணிக நிறுவனம் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும்– இந்தவாக்கியத்தை அடிப்படையாகக் கொண்ட கணக்கியல் கருத்து, நிறுவனத் தொடர்ச்சி கருத்து ஆகும்.



Padasalai.Net

**ஒரு வணிக நிறுவனம் தொடர்ச்சியாக நடைபெறவேண்டும். இதை அடிப்படையாகக் கொண்ட கணக்கியல் கருத்தை விளக்குக.**

**"Business units last indefinitely".**

**Mention and explain the concept on which the statementis based.**

- இக்கருத்தின் அடிப்படையில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை மதிப்பீடு செய்தல், நிலைச் சொத்தின் மீதான தேய்மானம், கொடுபட வேண்டிய மற்றும் முன்கூட்டிச் செலுத்திய செலவுகள், பெறவேண்டிய மற்றும் கூடியுள்ள வருமானம் போன்றவைகளின் கணக்கியல் வழிமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.



# கணக்கியல் தரநிலைகள்
## Accounting Standards.




- கணக்கியலில் பின்பற்றப்பட வேண்டிய கட்டமைப்பையும், விதிகளையும் கணக்கியல் தரநிலைகள் தருவதால், வெவ்வேறு நிறுவனங்களின் நிதிநிலை அறிக்கைகளை ஒப்பீடு செய்ய முடிகிறது.

Padasalai.Net

# கணக்கியல் தரநிலைகள்
## Accounting Standards.

- நிதிநிலை அறிக்கை தயார் செய்வதில், நிலைத் தன்மை, ஒப்பீட்டு தன்மை, நிறைவுத் தன்மை, மற்றும் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு கணக்கியல் கோட்பாடுகளை தரநிர்ணயம் செய்வது அவசியமாகிறது.




Padasalai.Net

# கணக்கியல் தரநிலைகள்
## Accounting Standards.




- கணக்கியல் தரநிலைகள் என்பது கணக்கியல் நடவடிக்கைகள் மற்றும் நிகழ்வுகளை அடையாளம் கண்டு அளவிட்டு, பதிவுசெய்து, தகவல்களை நிதி அறிக்கை வாயிலாக வெளிப்படுத்துவதற்காக, கணக்கியல் வல்லுநர் குழு அல்லது அரசு அல்லது பிற ஒழுங்காற்று அமைப்புகளால் வெளியிடப்படும் கொள்கை ஆவணங்களாகும்.

PadasalaiNet

Thank you ….

M.Muthu Selvam

M.Sc.,M.Com.,M.Ed.,M.Phil

PG.Asst., (Commerce)

MLWA.Hr.Sec.School

Madurai -1

Mail Id : dhakshina29@gmail.com

Mobile No : 98421 04826

Padasalai.Net